பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

25 02 2025 **TUESDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பொருளாதார வளர்ச்சியில் இந்தியா குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் கண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

2. புதை படிம எரிபொருள் பயன்பாட்டை குறைக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு மனோகர் லால் வலியுறுத்தியுள்ளார்.

3. கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் சுற்றுலாத்துறை முன்எப்போதும் இல்லாத வகையில் விரைவான வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

4. ஹமாஸ் அமைப்புடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தை நீட்டிக்க தயாராக உள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

5. புரோ லீக் ஹாக்கிப்போட்டியின் ஆடவர் பிரிவில் இந்திய - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<>>>>**

பொருளாதார வளர்ச்சியில் இந்தியா குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் கண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத்தில் காணொலி மூலம் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், மத்திய அரசின் திட்டங்கள் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட்டுள்ளதாக கூறினார்.

மனித உரிமைகளை பாதுகாப்பதில் இந்தியா முக்கிய பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்தை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது என்று அவர் உறுதிபட கூறினார்.

உலக நாடுகள் பன்முகத்தன்மையுடன் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை திரு ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

**<<<<>>>>**

புதை படிம எரிபொருள் பயன்பாட்டை குறைக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு மனோகர் லால் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், கார்பன் உமிழ்வை குறைப்பதற்கான இலக்குகளை எட்ட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் கார்பன் பயன்பாடுகள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற கருத்தரங்குகள் கார்பன் பயன்பாடு குறித்தும், அதில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைப்பதாக திரு மனோகர்லால் கூறினார்.

<<<<>>>>

கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் சுற்றுலாத்துறை முன்னெப்போதும் இல்லாத வகையில் விரைவான வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

புவனேஷ்வரில் அம்மாநில சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், மக்கள் கோயில்கள் அல்லது சுற்றுலாத்தலங்களுக்கு பயணம் மேற்கொள்வதை வழக்கமாக கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

இத்துறையின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் காரணமாக இந்தியா மீதான உலக நாடுகளின் பார்வை மாறியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாடுகளுக்கு இடையே நல்லுறவை வளர்ப்பது சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு உதவிடும் என்று அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

பொதுத்துறை ஊழியர்களின் நலன்களை மேம்படுத்துவதில் அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று அகில இந்திய தேசிய பொதுத்துறை ஊழியர்கள் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அமைச்சர் திரு ஜிதேந்திர சிங்கை சந்தித்து பேசினர்.

இந்த சந்திப்பின்போது, பல்வேறு ஓய்வூதிய திட்டங்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து அவர்கள் விவாதித்தனர்.

அப்போது தேசிய ஓய்வூதியத்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றின் நன்மைகள் குறித்து அமைச்சர் விரிவாக எடுத்துரைத்தார்.

ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து கவனமுடன் மதிப்பீடு செய்து முடிவெடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு

பொதுத்துறை ஊழியர்கள் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

<<<<>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ஐந்து நாள் பயணமாக பீகார், மத்தியப்பிரதேசம், குஜராத் மாநிலங்களுக்கு இன்று புறப்பட்டு செல்கிறார்.

முதலாவதாக இன்று பீகார் செல்லும் அவர், பாட்னாவில் உள்ள மருத்துவக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்கிறார்.

பின்னர், மத்தியப்பிரதேச மாநிலம் செல்லும் அவர், சத்தர்பூரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

நாளை மறுநாள் குஜராத் செல்லும் குடியரசுத் தலைவர், அகமதாபாதில் உள்ள தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனத்தின் 44-ஆவது பட்டமளிப்பு விழா உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

<<<<>>>>

ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்களுக்கான 12-ஆவது மண்டல அளவிலான பொருளாதார ஆலோசனைக்கூட்டம் ராஜஸ்தானில் அடுத்த மாதம் 3-ஆம் தேதி தொடங்குகிறது.

ஜெய்பூரில் நடைபெறும் இந்த மூன்று நாள் கூட்டத்தில், ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் குறித்தும் பொருளாதார மேம்பாடு குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதில், 25 நாடுகளை சேர்ந்த 500 பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . .

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளா நாளை நிறைவடைகிறது.

மகா சிவராத்திரியையொட்டி, ஏராளமான பக்தர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராட வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனையொட்டி, அங்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அங்கு அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

மேலும், ஊர் காவல் படையினர், தேசிய பேரிடர் மீட்புப்படையினர் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகக்குழுக்கள் தயார் நிலையில் உள்ளதாக எமது செய்தியாளர் மேலும் கூறுகிறார்.

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

<<<<>>>>

தமிழக அரசு செயல்படுத்தி வரும் மக்கள் நலத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற மாநில திட்டக்குழு ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொண்ட அவர், மாநில அரசின் திட்டங்களின் பயன்கள் மற்றும் அதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் தாக்கங்கள் குறித்தும் கேட்டறிந்தார்.

மக்கள் நலத்திட்டங்களை திறம்பட செயல்படுத்திய திட்டக்குழுவுக்கு திரு உதயநிதி ஸ்டாலின் பாராட்டு தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம் விவசாயிகள் இடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது

தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட விவசாயிகள், இத்திட்டம் தனது வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - விவசாயி – 35 செகண்ட்ஸ்)*

<<<<>>>>

ஹமாஸ் அமைப்புடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தை நீட்டிக்க தயாராக உள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

பிரஸ்ஸெல்ஸில் பயணம் மேற்கொண்டுள்ள இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் திரு **'Gideon Sa'ar** ஐரோப்பிய யூனியனை சேர்ந்த பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

பிணைக்கைதிகளை விடுவிக்கும் வகையில் தற்காலிக ஏற்பாடாக போர் நிறுத்தத்தை நீட்டிக்க இஸ்ரேல் முடிவு செய்துள்ளதாக கூறினார்.

ஈரான் மீது பொருளாதார தடைகளை விதிக்க இதுவே சரியான தருணம் என்று திரு **'Gideon Sa'ar** தெரிவித்தார்.

<<<<>>>>

ஜெர்மனியில் நடைபெற்ற தேர்தலில் கிறிஸ்தவ ஜனநாயக கட்சி வெற்றிபெற்றுள்ளது.

இதையடுத்து, புதிய ஆட்சி அமைப்பதற்கான நடவடிக்கைகளை அக்கட்சி மேற்கொண்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிறிஸ்தவ ஜனநாயக கட்சியின் தலைவர் திரு **'Friedrich Merz'** அந்நாட்டு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், ஒருமித்த கருத்துகளை கொண்ட கட்சிகளுடன் கூட்டணி அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

புரோ லீக் ஹாக்கிப்போட்டியில், இந்தியா - இங்கிலாந்து இடையோன ஆடவர் பிரிவு இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

புவனேஷ்வரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இந்தியா – நெதர்லாந்து இடையேயான மகளிர் பிரிவு இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

--------------

உலகக்கோப்பை **Shotgun** துப்பாக்கிச்சுடும் போட்டியில் பங்கேற்கும் 12 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சைப்பிரஸில் உள்ள நிக்கோசியாவில் வரும் மே மாதம் மூன்றாம் தேதி தொடங்கி, 12-ஆம் தேதிவரை இப்போட்டி நடைபெறுகிறது.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்ட கைனன் **Kynan Chenai, Miraj Ahamad Khan** ஆகியோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

----

ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

**'Mulheim '** நகரில் நடைபெறும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் பிரித்வி கிருஷ்ணமூர்த்தி – சாய் பிரதீக் இணை, இங்கிலாந்து இணையை எதிர்கொள்கிறது.

------------

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் உத்தரப்பிரதேச அணி சூப்பர் ஓவர் முறையில் பெங்களூரு அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<END>>>>